UDI

Norwegian Directorate of Immigration

# பாலஸ்தீன மருத்துவபீட மாணவர்கள் நோர்வேயில் கல்விகற்க நோர்வே வெளிவிவகார திணைக்களம் அனுமதி மறுப்பு. நோர்வே மாணவர் அமைப்பு இந்த முடிவை மனிதாபிமானமற்றது என்று கடிந்துள்ளது.



ஜூன் மாதம், ஒஸ்லோ பல்கலைக்கழகம் காசாவிலிருந்து பத்து மருத்துவ மாணவர்களுக்கு நோர்வேயில் கல்வி கற்பதற்கான அனுமதியினை வழங்கியது, ஒஸ்லோ பல்கலைக்கழகமே அவர்களுக்கான கல்வி, பயண செலவு மற்றும் தங்குமிடம் போன்றவற்றினையும் பொறுப்பேற்றுள்ளது.

அதேவேளை காஸாவைச் சேர்ந்த ஐந்து மருத்துவ மாணவர்கள் நோர்வேயில் தங்கியிருந்து கல்வி கற்பதற்கான விண்ணப்பங்களை வெளிவிவகார திணைக்களம் நிராகரித்துள்ளது.

ஏனைய ஐவருக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. விசா மறுப்புகளுக்குக் காரணம், இந்த மாணவர்கள் கல்வி கற்று முடிந்த பிறகு திரும்பவும் தமது நாட்டுக்கு செல்ல மாட்டார்கள் என தெரிவிக்கப்படுகிறது. இது விடயத்தில் அரசியல் அதிகாரம் கொண்ட நீதி அமைச்சகம், கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது,

அதேவேளை வெளிவிவகார திணைக்களம் விதிமுறைகளை மட்டுமே பின்பற்றுவதாகவும், அதன் பின்னணியில் உள்ள கொள்கைக்கு நீதி அமைச்சகம் தான் பதிலளிக்க வேண்டும் என்றும் வெளிவிவகார திணைக்களம் கூறுகிறது.

மாணவர்களுக்கு ஏற்கனவே கல்விகற்கும் இடங்கள் இருப்பதால், வெளிவிவகார திணைக்களம் விவேகத்துடன் செயல்பட வேண்டும் என்று நோர்வே மாணவர் அமைப்பு தெரிவிக்கிறது.

காஸா மாணவர்களுக்கு குடியிருப்பு அனுமதி வழங்காதது மிகவும் மனிதாபிமானமற்ற செயலாகத் தோன்றுகிறது. உயர்கல்வி கற்கும் வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்க வேண்டும். இன்று காஸாவில் உயர் கல்விக்கான சாத்தியமில்லை. அதனால்தான் நோர்வே பல்கலைக்கழகங்கள் இத்தகைய திட்டங்களை வழங்குவது மிகவும் முக்கியம் என நோர்வே மாணவர் அமைப்பின் தலைவர் கூறியுள்ளார்

கடந்த அக்டோபர் 7 நாள் காஸாவில் ஆரம்பமாகிய யுத்த தாக்குதலுக்குப் பின்னர் காஸாவில் எந்தவித பாடசாலை வகுப்புக்களும் நடைபெறுவதில்லை என்பது அவதானிக்கத்தக்கது.